# RTO பணியிறக்கப்படுவாரா?
# முறைகேடில் பதவி உயர்வு!
# அரசுக்கு தொடரும் வருமான இழப்புகள்...

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கடந்த 2019-ல் ஆய்வாளராக பணியாற்றி வந்தவர் பூங்குழலி. இன்று சென்னை (தெற்கில்) K.K. நகர்பகுதியில் உள்ள இணை போக்குவரத்து அலுவலகத்தின் செயலாக்க பிரிவில், RTO அதிகாரியாக உள்ளார். கடந்த 28.02.2019, மற்றும் 01.03.2019-ல் என்னால் ஆய்வாளர் பூங்குழலி மீது,போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் ஒன்றிற்கு 25,000 லஞ்சம் பெறப்பட்டு, வாகன நிறுவனத்தினரால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் Dimensions, weights, performance and technical specification என எல்லாவற்றையும் மீறி alteration செய்யப்பட்டு விதிகளை மீறிய வாகனங்களை பொதுச்சாலையில் இயக்க பூங்குழலியால் தகுதிச் சான்றுகள் வழங்கப்பட்டு வந்தது.

இப்படி இயக்கப்படும் வாகனத்தின் நீளம் 18 1/2 அடி நீளமும் pomber to pumber 24 அடியாகவும் இருக்க வேண்டும் என்பது ஆணையாக இருந்தாலும், இது போன்ற வாகனங்களில் 30 to 38, மற்றும் 40 அடிக்கு பாடி அமைத்திருப்பதும், வாகனத்தின் அகல அளவுகளில் அதிகபட்சமாக 8 அடியாக இருக்கலாம் என்றாலும், 9 அடிக்கு மேல் பத்து அடிக்கு உள்ளதாகவும் இருந்து வந்ததால், விபத்துக்கள் பெருகுவதற்கான வழிகளை உருவாக்கிய ஆய்வாளர் பூங்குழலி வழங்கிய வாகன தகுதிச் சான்றிதழ்களை ரத்து செய்ய கோரியும், அந்த வாகனங்களை சிறைப்பிடிக்கவும் நாம் அரசுக்கு புகாராக தெரிவித்திருந்தோம்.

அதனை தொடர்ந்து, திண்டுக்கல் RTO ஆனந்த் மற்றும் திண்டுக்கல் மாவட்ட விஜிலென்ஸ் போலிசார் எடுத்த நடவடிக்கைகளில் கையும் களவுமாக சிக்கினார் ஆய்வாளர் பூங்குழலி.

இப்படியொரு புகார் நிலுவையில் இருக்கிற போது ஆய்வாளர் பூங்குழலி, பல பல பல லட்சங்கள் ஆணையர் ஜவஹர் IAS, க்கும் DTC நாகஜோதி மற்றும் எழிலக அதிகாரிகள் சிலருக்கும், லஞ்சம் கொடுக்கப்பட்டு பதவி உயர்வுகளையும் முறைகேடாக பெற்று, தனது அதிகாரத்தை விரிவுபடுத்தி மேலும், மேலும் பல்வேறு முறைகேடுகளையும் தொடர்ந்து வருகிறார். அதனால் இவரது பணிக்கு பதவியிறக்கம் செய்யப்பட வேண்டும் என நாம் கோரி வந்தோம்.

தற்போது, உயர,நீள, அகல அளவுகளில் உள்ள வித்தியசமான வாகனங்களுக்கு பூங்குழலியால் வழங்கப்பட்ட தகுதிச்சான்றிதழ் குறித்த விசாரணைக்கான கோப்புகள் விழுப்புரம், DTC ரஜினிகாந்தின்,மேஜையில் இருந்து நகர வேண்டிய நிலையில், எல்லாம் முடிவுற்ற நிலையில் இருந்து வருகிறது.

மேலும், பூங்குழலியை காப்பாற்ற துடிக்கும் சில ஊழல் அதிகாரிகளால், பூங்குழலி மீதான குற்ற கோப்புகளை நீர்த்துப்போகச் செய்வதற்காக மீண்டும் லட்சக்கணக்கில் பேரங்கள் நடத்தப்பட்டு வருவதாக எழிலகத்தில் உள்ள நேர்மையான அதிகாரிகளிடம் இருந்து செய்திகள் கசிந்த வண்ணமாக உள்ளது. மேலும் இந்த கோப்புகளில் உள்ள குற்றப்பதிவுகள் எல்லாமே பூங்குழலிக்கு பாதகமாகவே இருப்பதால் DTC ரஜினிகாந்த் அவர்களால் ஒரு தீர்மான முடிவை பூங்குழலிக்கு சாதகமாக எடுக்க முடியாத சூழ் நிலையில், என்ன செய்வது என தெரியாமல் கையை பிசைந்துகொண்டுள்ளார் DTC ரஜினி.

*மேலும் மேற்கொண்ட கோப்புகளின் விசாரணையில் அரசுக்கான வருமான இழப்புகள் எதுவும் இல்லை என விசாரணை அறிக்கையினை வழங்க DTC ரஜினிகாந்த் நிர்பந்திக்கப்படுகிறார் என்ற செய்திகளும் வந்த வண்ணமாக உள்ளது.*

*எனவே மேற்கண்ட பூங்குழலியின் கோப்புகள் மீதுள்ள குற்றச்சாட்டுகளில் மறைக்கப்படும் உண்மைகளை அறிந்து, உரிய நடவடிக்கை எடுப்பதோடு, பூங்குழலியால் ஏற்படுத்தப்படும் விபத்தை தடுக்கவும், முறைகேடாக பூங்குழலிக்கு வழங்கப்பட்ட RTO க்கான அவரது பதவி உயர்வை பணியிறக்கம் செய்யவும், பூங்குழலியின் முறைகேடான பதவி உயர்வுக்கு வழிவகுத்த அதிகாரிகள் எவர் எவரோ அவர்கள் அனைவர்மீதும் துறை ரீதியான நடவடிக்கைகளும் மற்றும் கிரிமினல் வழக்குகளும் அந்த ஊழல் அதிகாரிகள் மீது பதிய உள்துறை செயலரும் போக்குவரத்து ஆணையர் மற்றும் அமைச்சரும் உரிய நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.*

*பூங்குழலியின் அதிகார வரம்புகள் அதிகரிக்க, அதிகரிக்க விபத்துக்கள் பெருகும் என்பதோடு அரசிற்குரியவருமானங்கள் எல்லாம் பூங்குழலியால் களவாடப்படும் என்பதே நிதர்சனமான உண்மைகள் என அறிந்தும் DTC ரஜினி கோப்புகளை நகர்த்த திக்கு முக்காடுவதே எழிலக உயர்அதிகாரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தி நிற்கிறது.*

*அதே போல், இது போன்ற வாகனங்களுக்கு பூங்குழலியால் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படாமலோ அல்லது இந்த வாகனங்கள சிறைபிடிக்கப்பட்டு,*
*பொதுச் சாலையில் இயங்குவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்திருந்தால், சமூக சீர்கேடுகள் நடப்பதையும் முதலில் தவிர்த்திருக்கலாம். அதாவது கஞ்சா மற்றும் போதை வஸ்துக்களான பொருட்கள் கடத்துவது தடுக்கப்பட்டிருக்கும்.*

*மேலும், "6"- வில் கொண்ட இது போன்ற மாடு ஏற்றும் வாகனங்களில் ஒரு வாகனத்திற்கு 40 மாடுகள் அடங்கும் , ஒரு மாடு குறைந்தபட்சம் 500 கிலோ (சில மாடுகள் 600 கிலோவாகவும் இருக்கும்) என்றே கணக்கீடு செய்கிற போது அந்த வாகனத்தின் உள்ள மாட்டின் எடை மட்டும்இருபது டன் ஆகும்.*

*ஆறு "வீல்" உள்ள வாகனத்திற்கு எடையளவு என்பது வாகனத்தையும் சேர்த்து மொத்தம் 18 டன் என்பதே. ஆக மாடு எடை 20 டன்னும், அந்த வாகனத்தின் எடையான 5 டன்னும் சேர்க்கிறபோது மொத்தம் 25 டன்னாக எகிறுகிறது. அரசின் அனுமதி 18 - டன் என்கிற போது மீதமுள்ள 7 டன் ஒவர்லோடும், ஒரு டன்னுக்கு ரூபாய் 5,000 வீதம் 7x5=35,000 ஆகும். அதே போல் அரசு அனுமதித்த 18 டன்-க்கு மேல் ஒரு கிலோ அதிகமாக இருந்தால் CF (COMPOUND FEE) என்ற இணக்க கட்டமான ரூபாய் 20,000 ஆகும். ஆக 20,000+35,000 இரண்டும் சேர்ந்து ஒரு வாகனத்திற்கு 55,000 அபராதம் வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். அது மட்டுமல்லாது பொதுச்சாலையில் இயக்குவதற்கு தகுதியற்ற நிலையில் உள்ள இந்த வாகனத்திற்கான தகுதிச்சான்றிதழ் வழங்கியதும் தவறு என்பதால், அதனை சிறைப்பிடித்து அபராதம் வசூலிக்காததும் தவறு என்பதால், அரசுக்குரிய வருமான இழப்புகள் ஏற்பட்டது என்பதுதான் உறுதிபடுத்தபடுகிறது. அது மட்டுமல்லாது இது போன்ற வாகனங்களுக்கு இவரே தகுதிச்சான்றிதழ் வழங்கியிருக்கிறபோது அரசுக்கு எப்படி வருமான இழப்புகள் இல்லை என்ற கூற முடியும்?*

*மேலும், இது போன்ற வாகனங்களுக்கு இவரால் தகுதிச்சான்றிதழ்கள் வழங்கப்படாமல் இருந்திருந்தாலே, 10 வீல் 12 வீல் மற்றும் 16 வீல் என அதிக சக்கரங்களை கொண்ட வாகனங்கள் தான் இது போன்ற தொழில்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும். இப்படி*

*வாகனத்தின் சக்கரங்கள் அதிகமாக, அதிகமாக அரசுக்கான வரிகளும் கூடுதலாவதால், அரசிற்குரியவருமானமும் கூடுதலாக கிடைத்திருக்கும். மேலும் முறைகேடாக நீட்டிக்கப்பட்ட நீளம், அகல அளவுகளால் ஏற்படும் விபத்துக்களும் தடுக்கப்பட்டிருக்கும்*

*அதே போல், இன்றைய நிலையில் பூங்குழலி முறைகேடாக பதவி உயர்வை பெற்று செயலாக்க பிரிவில் உயர் அதிகாரியாக (RTO) பொறுப்பேற்றும், இன்றளவும் இது போன்ற வாகனங்கள் சிறை பிடிக்கப்படாமல், அந்த வாகனங்கள் மூலம் கஞ்சா கடத்துவதற்கு பூங்குழலியால் உதவப்பட்டு வருகிறது. செயலாக்கப்பிரிவு பணி என்பது பொதுச் சாலையில் நின்று, ஆய்வுகளை மேற்கொள்ளும் முக்கிய பணிகள் என்பதும் குறிப்பிடதக்கது என்பதால், இங்கு பதவி உயர்வில் பணியிடமாற்றம் பெற்ற பின்பும் கூட, இவரால் மேற்கண்ட மாடுகளை ஏற்றிச் செல்லும் எந்த வாகனங்களும் சிறைப்பிடிக்கப்பட்டு அபராதமும் வசூலிக்கப்படவில்லை. அதனால் பூங்குழலியால் எந்த ஒரு மாட்டு வண்டி மீதும் அரசுக்குரிய எந்த வருமானமும் ஈட்டப்படாமல், எல்லாமே இழப்பீடாக அமைந்ததுள்ளதும் குறிப்பிடதக்கது.*

*பூங்குழலி முறைகேடாக பதவி உயர்வு பெற்ற, அதேநேரத்தில், இவர் பதவி ஏற்ற சில மாதத்திலே ஒரே ஒரு மாட்டுவண்டி மட்டும் சிறை பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட RTO - அலுவலகத்திற்கு தகவல் தராமலும், அந்த வாகனம் "பிளாக்" செய்யப்படாமல் இருப்பதும், பூங்குழலியால் இன்றுவரை லஞ்சத்திற்கான பேரம் நடத்தப்பட்டு வருகிறது என்பதற்கான ஆதாரத்தை பாரீர். கடந்த 17-02-2022-ல் KA 59 - 2057 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் பூங்குழலியால் பழி கொள்ள சிறைப்பிடிக்கப்பட்டாலும், இதுவரை ஏன் அந்த வாகனம் பிளாக் செய்யப்படவில்லை.சம்பந்தப்பட்ட RTO -வுக்கு தகவல் தரப்பட்டு "பிளாக்" செய்யப்பட வேண்டிய வாகனம், கடந்த எட்டு மாதமாக ஏன் பிளாக் செய்யப்படவில்லை. இது அவரது ஊழல் பணி மற்றும் அலட்சிய பணிகளையும் தானே நிரூபிக்கிறது (பார்க்க - பூங்குழலியால் பழிதீர்க்கப்பட்ட KA 59-2057ஆய்வறிக்கையின் நகல் மற்றும் பிளாக் செய்யப்படாததற்கான சான்று .அதே போல் இதே இளங்கோவின் மற்றொரு வாகனம் கர்நாடாக மாநிலமான நிலமங்களா RTO -ல் பிளாக் செய்யப்பட்டதற்கான சான்று ஒன்றையும் நமது வாசகர்கள் வேறுபடுத்தி பார்ப்பதற்கான அதாரமாக இணைப்பில் இருப்பதை பாரீர்)*

*மேலும் சிறைப்பிடிக்கப்பட்ட இந்த KA 59 2057 வாகனமும் கூட, பூங்குழலிக்கான குற்ற விசாரணையில் அவருக்கு எதிராக இளங்கோ என்பவர் சாட்சி சொன்னதால், அவரை பழி தீர்க்கவே அவரது வாகனத்தை சிறைப்பிடித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும் இந்த வாகனம் இளங்கோ அவர்களது மச்சினன் "கும்மராஜா" என்பவரது பெயரில் RC உள்ளது என்பதும் குறிப்பிடதக்கது.*

*அதாவது, தற்போது விழுப்புரம் DTC ரஜினி அவர்களால்,விசாரணை நடத்தப்படும், மேற்கண்ட புகார் சம்பந்தமான நடவடிக்கைக்கு முதலாம் சாட்சியே அந்த சிறைப்பிடிக்கப்பட்ட வாகனத்தின் நிர்வாகியான இளங்கோ என்பவராவார்.எனவே அவரை பழிவாங்கவே அந்த வாகனம் சிறைபிடிக்கப்பட்டது. எனவே இந்த கொடூர ஆய்வாளரான பூங்குழலியின் பழிவாங்கல் எண்ணங்களை பற்றி இனி நாம் விரிவாக விளக்க வேண்டியதில்லை என நம்புகிறோம்.*

*மேலும்,பூங்குழலி சென்னை தெற்கு பகுதியில் செயலாக்க பிரிவு அதிகாரியாக பதவியேற்ற இந்த ஒரு வருடம், மூன்று மாத காலத்தில், நாளது தேதி வரை இது போன்ற வாகனங்கள் எத்தனை சிறைபிடிக்கப்பட்டது என்றும், அந்த வாகனத்தில்*

*இருந்து பூங்குழலியால் அரசிற்கு பெறப்பட்ட அபராத வருமானம் எவ்வளவு என கணக்கிட்டால் ஜீரோவாகத்தான் இருக்கும்.*

*மேலும்,இந்த மாட்டுவண்டி மூலமாக பூங்குழலியால், அரசுக்கு எந்த வருமானமும் ஈட்டப்படவில்லை என்பதும் தெரியவரும். எல்லாமே லஞ்சம் என்ற பேரங்களோடு பூங்குழலியின் கஜனாவிற்கே சென்றிருப்பதையும் அறியமுடியும்.எனவே சிறை பிடிக்கப்படாத அந்த வாகனத்தின் அபராத தொகைகள் அனைத்தும் அரசுக்கு வர வேண்டிய வருமான இழப்புகள் தான் என்பதும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய விஷயமாகும்.*

*எனவே அரசுக்கு வர வேண்டிய அந்த இழப்பீடுகளை எல்லாம் RTO பூங்குழலியின் வருமானத்தில் பிடித்தம் செய்ய கோருவதோடு,போக்குவரத்து வீதிகளை மீறி பொதுச்சாலையில் இயங்கிற இந்த வாகனங்கள் எல்லாம் பூங்குழலியால் சிறைபிடித்திருக்கும் பட்சத்தில், மேற்கண்ட மாடு கடத்தும் தொழிலை செய்வதற்காக 10 வீல், மற்றும் 12-வில் கொண்ட வாகனங்களே பொதுச்சாலையில் இயங்குகிற நிலைகள் தான் உருவாக்கப்பட்டிருக்கும். இப்படி இவை அனைத்தும் இயங்காமல் போனதற்கு பூங்குழலியின் ஊழல் பணிகள்தான் காரணமாகும்.*

*அதனால் அரசுக்கான வரி வருடத்திற்கு 30,800 வருமானமும் கூடுதலாக கிடைத்திருக்கிற வாய்ப்புகள் உருவாகியிருக்க வேண்டிய நிலையில், எல்லாமே பூங்குழலியால் வருமான இழப்புகளுக்குத்தான் வழி வகுக்கப்பட்டுள்ளது. அதே போல் வாகனத்திற்கான "சக்கரங்கள்" அதிகமாக, அதிகமாக அரசிற்கான வரிகளும் அதிகமாக கிடைக்கும் என்பதால், இதுபோன்ற முறைகேடான வாகனங்களை எல்லாம், பூங்குழலியால் பொதுச்சாலையில் அனுமதிக்கப்பட்டதால், அரசுக்கு வருமான இழப்புகள்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை என்கிறபோது, எழிலக ஊழல் உயர் அதிகாரிகளால் எப்படி, பூங்குழலியின் நடவடிக்கையால் அரசுக்கான வருமான இழப்புகள் இல்லை என்று எப்படி கூறமுடியும்?*

*'எனவே, அய்யா DTC - அவர்களுக்கு "தெரியாத சட்டம் ஒன்றுமில்லை, அதில் எந்த சட்டம் சிறந்த சட்டமோ அதை தாங்களே தேர்ந்தெடுத்து எதை எதை சேர்க்க வேண்டுமோ அதனை எல்லாம் சேர்த்து தக்க நடவடிக்கை எடுத்து" விபத்தை தடுக்கவும் அரசிற்கான வருமானங்களை கூட்டுவதற்கான வழிகளையும் உருவாக்க முற்படுங்கள் என கோருகின்றோம்.அதிரடிகள் பாயுமா? பொறுத்திருந்து பார்ப்போம்*


***நெல்லை கோபால்.***

***மூத்த பத்திரிகையாளர்.***

***06-10-2022/9994478389.***